4. விதி 110-ன்கீழ் அறிக்கை

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் நிபந்தனைகளைத் தளர்த்தி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை இந்த மாமன்றத்திலே வழங்குகிறேன்.

நகர்ப்புறப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி அப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மேலும், இதுபோன்று பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அதுபற்றி நல்ல முடிவு காணப்படுமென்று நேற்றையதினம் இந்த அவையில் அறிவித்ததையொட்டி, அதிகாரிகளோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவினைத் தெரிவிக்கின்றேன்.

இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்தும், விளக்கங்கள் அளித்தும், நிபந்தனைகளைத் தளர்த்தியும், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுதாரர்களிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப்பெறாததால், இந்தத் திட்டத்தால் பெருமளவில் மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த சில நிபந்தனைகளை மேலும் தளர்த்தி பின்வரும் ஆணைகள் வழங்கப்படும் :—

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியைத் தவிர, இதர மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் 22-9-2000-க்கு முன்பு குறைந்தது 50 விழுக்காடு மனைகள் விற்கப்பட்டோ அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டோ இருக்கும் மனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இம்மனைப் பிரிவுகளில் உள்ள சாலைகளின் மொத்த நீளத்தில் குறைந்தது 75 விழுக்காடு சாலைகள் 20 அடி அகலத்திற்குக் குறையாமல் இருந்தால் போதும்.

2001 ஜனவரி 31] [கலைஞர் மு. கருணாநிதி]

3. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமாக ஒன்றரை மடங்கு என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவுகளுக்கு கட்ட வேண்டிய அபிவிருத்திக் கட்டணமான ஒரு மடங்கைமட்டும் கட்டினால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் உள்ள மொத்தப் பரப்பளவில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக பொதுப் பயன்பாட்டிற்கான நிலம் இருக்குமேயானால், எந்த அளவிற்கு குறைவாக இருக்கின்றதோ அதற்கு ஈடான நிலத்தின் மதிப்பை தற்போதைய வழிகாட்டி பதிவேட்டின்படி 50 விழுக்காடு மட்டும் செலுத்தினால் போதும்.

5. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முறைப்படுத்தும் கட்டணமாக—Regularisation Fees—மாநகராட்சிப் பகுதிகளில் மனையின் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 20-ம், நகராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 10-ம், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 3-ம் செலுத்தினால் போதும்.

முற்பகல் 10-55

6. இத்திட்டத்தின்கீழ் 30-6-2001-க்கு முன்னர் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். எனவே, இத் திட்டத்தினுடைய சலுகைகளைப் பயன்படுத்தி, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் மனைகளை வைத்திருப்போர் அதனை முறைப்படுத்திக்கொண்டு உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அடிப்படை வசதிகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை மீது clarification கிடையாது.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட ஏரியாவில் நிறைய பிரச்சினை இருக்கிறது. C.M.D.A.-வைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாரிஃபிகேஷனைத் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள், விதி 110-ன்கீழ் நான் clarification-னை அனுமதிக்க மாட்டேன்.